Y-MCA வ/கி/க

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 12 றஜப் 8 இதழ்: 274
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-1-1991

### தமிழ்நாடு சட்டப்பேரவை
## கூட்டங்களை பகிஷ்கரிக்க அண்ணா தி. மு. க. முடிவு!

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைக் கூட்டங்களை அ. இ. அ. தி. மு. க. பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அண்ணா தி. மு. க. உறுப்பினர்கள் இனிமேல் சட்டமன்றக் கூட்டங்களுக்குச்செல்ல மாட்டார்கள் என்றும் ஆனால் கூட்டங்களைக் கவனிப்பார்கள் என் வழக்கம்போல் தொகுதிவேலை

[4ம் பக்கம் பார்க்க]

## இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு

(சென்னை)

தமிழக சட்டப்பேரவை நேற்று கூடியபோது அண்ணா

(4-ம் பக்கம் பார்க்க)

### உணவுப் பதுக்கல் விமானத் தாக்குதலை எதிர்த்து
# யாழ். நகரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(அலுவலக நிருபர் தேவா)

விமான தாக்குதல், உணவு, எரிபொருட்கள் பதுக்கல், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்து நேற்றுக்காலை யாழ்நகரில் மாணவர்கள், பொதுஸ்தாபன ஊழியர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் நண்பகல் 1-30மணிக்கு யாழ். செயலகத்தை வந்தடைந்தது.

''இரத்தம்சிந்தும் போராட்டத்தில் - கறுப்புப்பணம் தேடாதே''.

''ஊழல் மோசடிகளை அகற்றுவோம்.''

''நிறைகுறைத்து விற்று பொதுமக்களை - நிலைகுலைக்காதே.''

''திட்டமிட்ட பொருளாதாரத்தடையை முறியடிப்போம்'' போன்ற சுலோக அட்டைகளை ஊர்வலத்தினர்

(4ம் பக்கம் பார்க்க)

### ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி, கரவெட்டி, மாலிசந்தி பகுதிகளில் ஹெலிஹொப்டர் வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. (ச)

### பதிவு செய்யப்படாத இடத்தில்
## களஞ்சியப்படுத்தும் பொருட்கள் பறிமுதலாகும்

[யாழ்ப்பாணம்]

பதிவுசெய்யப்படாதஇடங்களில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் கண்டுபிடிக்கப்பட்டால் கட்டட உரிமையாளர்களும் தண்டனைக்குள்ளாக்கப்படுவதுடன் பொருட்களும் பறிமுதல்செய்யப்படும்.

வர்த்தகர் சங்கமும், விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களமும் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வர்த்தகர்கள் பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடங்களின் முகவர்களை வர்த்தகர் சங்கத்தில் உடன் பதிவுசெய்யும்படிகோரப்படுகின்றார்கள். மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தத்தமது களஞ்சியங்களில்மட்டுமே பொருட்களை களஞ்சியப்படுத்தல்வேண்டும். (வி)

## இந்தியாவுடன் இனப்பிரச்னை பற்றிப்பேச அரசு திறந்த மனதுடன் உள்ளது' -ரஞ்சன்

(கொழும்பு)

இனப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடாத்த இலங்கை எப்போதும் திறந்த மனதுடன் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு இணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. வி.பி. சுக்ளா இனப்பிரச்சினை தொடர்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

## மேஜர் மக்கன்ரே வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் நேற்றுக்காலை வெளியேறிய இராணுவத்

(4ம் பக்கம் பார்க்க)

### வளைகுடா யுத்தம்
## 8600 கோடி டொலர் வரை அமெரிக்காவுக்கு செலவாகும்

[லண்டன்]

வளைகுடா யுத்தத்தினால் அமெரிக்காவுக்கு சுமார் 1700 கோடி டொலரிலிருந்து 8600 கோடி டொலர் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தினமும் 50கோடி டொலர் என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளதாக அமெரிக்க செனட்சபையின் ஆயுதக் கமிட்டி அறிவித்துள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு 2300 கோடி டொலர் உதவி அளிக்குமாறு இஸ்ரேல் அமெரிக்காவிடம் கேட்டுள்ளது.

ஈராக்கின் ஸ்கட் ஏவுகணை அழிவுகளைச் சமாளிப்பதற்கு 300கோடி டொலர் பணத்தை முதலில் தந்துதவுமாறு இஸ்ரேல் மேலும் கேட்டுள்ளது.

### 'இனப்பிரச்னையை தீர்க்க
## அரசு தயாரானால் ஆதரிக்க தயார்' - சிறிமா

[கொழும்பு]

'இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அரசு உண்மையான ஆவலுடன் தயாராக இருக்குமானால் என்னுடைய முழு ஆதரவையும் வழங்க நான் தயாராகஇருக்கிறேன்.'

எதிர்க்கட்சித்தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

(4-ம் பக்கம் பார்க்க)

### புலிகளால் கைப்பற்றப்பட்ட
## மண்ணெண்ணை மக்களுக்கு விற்பனை!

[யாழ்ப்பாணம்]

பொதுமக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து நல்லூர் - கச்சேரி 4-ம் சந்தியில் ஒருவீட்டில் 3 பெரல் மண்ணெண்ணையும், நல்லூர் மூத்தவிநாயகர் ஒழுங்கையில் 4 லீற்றர் மண்ணெண்ணையும் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட மண்ணெண்ணை கால் போத்தல்வீதம் பொதுமக்களுக்கு விற்பனைசெய்யப்பட்டது. இதேபோன்று இருபாலைப்பகுதியிலும் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணை மக்களுக்கு விற்பனைசெய்யப்பட்டது. [ச]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி-வடக்கு முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. இ. அரிச்சந்திரன், அரசடி லேன், தாவடி வடக்கு, கொக்குவில். (சி-4282)

எம்மிடம் ஆறு பன்னிரெண்டு கலர் கொண்ட கலர் பென்சில் பெட்டிகள், அல்பம் (சிறிய) முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விசேட கழிவு உண்டு. 390' ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்திக்கு அருகாமையில் (சசிகாந்தன் ஸ்ரோர்ஸ் முன்னுள்) யாழ்ப்பாணம். (சி-4286)

### பரீட்சை (ஆண்டு 5)

பிரபலபாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை 27-01-91 ஞாயிறு மு. ப. 8-00, மு ப. 10-30க்கு 219, நாவலர் வீதி (யுப்பிற்றர் வீடியோ சென்ரர் முன்பாக, யாழ்ப்பாணம் பி. ப. 1-30 மணிக்கு மகளிர் வைத்தியசாலை முன்பாக, கொக்குவில் மேற்கு [குளப்பிட்டி - ஆனைக் கோட்டைவீதி) நடைபெறும். அனுமதிப் பரீட்சை மாதிரி வகுப்புகளும், புதிய ஆண்டு 3, 4, 5 வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. (சி-4283)

### கொம்பியூட்டர் கல்வி

கொம்பியூட்டர் புரோகிறாமிங் இன் Basic Language. ஆரம்பம்: 27-01-91 - 10-30 மணி. I.A.B, Short - Hand & Typing நடைபெறுகின்றன. School of Business Administration 16, 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சி-4279)

### ஒப்செட் கலண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள், படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட 1991-ம்ஆண்டு மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீடுகளும்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. மாக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (சி-4291)

### திரவ சவர்க்காரம்

Milk White Liquid Soap எவ் வித அழுக்கையும் அகற்றும் சக்தி கொண்டது. வீட்டுச்சலவைக்கு சிறந்தது. போத்தல் ரூ. 90/- ½ போத்தல் ரூ. 45/- மொத்தக்கொள்வனவுக்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீன சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (எ-1057)

### பாலாஜி புத்தகசாலை

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலை புத்தக உபகரணங்கள், ராணிமுத்து, ராணி காமிக்ஸ் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 15/6 முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4289)



உ

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்
பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடர் - I

# ஸ்ரீ தியாகப் பிரம்ம
# இசை ஆராதனை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 27-01-1991 ஞாயிறு

## காலை நிகழ்ச்சிகள்
9-00 — 12-00 மணி

தலைமை:
சிவத்தமிழ்ச் செல்வி,
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

## நாதஸ்வர கானாமிர்தம்

| நாதஸ்வர மேதைகள் | தவில் மேதை |
|---|---|
| திரு. N. K. பத்மநாதன், | திரு. N. R. சின்னராசா, |
| திரு. M. பஞ்சாபிகேசன், | **தவில் இளவல்கள்** |
| திரு. M.P. பாலகிருஷ்ணன், | திரு. N.R.S. ரவீந்திரன், |
| திரு. K. R. சுந்தரமூர்த்தி, | திரு. T. உதயசங்கர், |
| திரு. V. K. பஞ்சமூர்த்தி, | திரு. K.R.S. ராமதாஸ், |
| திரு. R. கேதீஸ்வரன், | |
| திரு. K. கணேசன் ஆகியோர். | |

## பூஜை

## மாலை நிகழ்ச்சிகள்
2-00 — 6-00

தலைமை:
கலாநிதி, வித்துவான்
க. ந. வேலன்
அவர்கள்

## மங்கள இசை

ஈழநல்லூர் பி. எஸ். பிச்சையப்பா,
ரவி, ரஜி சகோதரர்கள்.

## பாட்டு

சங்கீதபூஷணம்: S. பத்மலிங்கம் (3—4 மணி)
சங்கீதபூஷணம்: பொன். சுந்தரலிங்கம் (4—5 மணி)
சங்கீதபூஷணம்: எல். திலகநாயகம் போல் (5—6 மணி)

திரு. R. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. பா. கண்ணன் — வயலின்
திரு. S. மகேந்திரன் — மிருதங்கம்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. S. துரைராஜா — கஞ்சிரா
திரு. K. கண்ணதாசன் — கடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
"கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

| திரு. தி. திருநந்தகுமார் தலைவர் | திரு. க. குமாரதாசன் செயலர் |
|---|---|

உதயன்-சஞ்சீவி நிறுவனத்தினர்
விழா சிறப்புற வாழ்த்துகின்றனர்
(ஏ 1056)


## குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போலியோ, குக்கல், தொண்டைக்கரப்பன், ஏற்புவலி, சின்னமுத்து, கயரோகம் ஆகிய நோய்கள் குழந்தைகளுக்கு வரக்கூடிய அபாயம் தறபோது தலைதூக்கியுள்ளது.

நோய்களின் தடுப்பு மருந்துகள் யாழ். மாவட்டத்திற்கு ஒழுங்காக விநியோகிக்கப்படாததினை காரணமாக இந் நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. (153)

## பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தனுக்குக் கொடிச்சீலை வழங்கவரும் வேல் முருகன் ஆலயத்தில் நாளை சந்தான கோவிலில் விக்கிரம் பிரதிஷ்டை பண்ணப்படவுள்ளது. (எஸ்)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருடம் தை திங்கள் 13ம் திகதி (26-01-91) சனிக்கிழமை காலை 7-51 மணி முதல் 9-23 மணி வரையுள்ள சுபவேளையில்,

| திரு. சின்னராஜா அவர்களின் புத்திரன் திருவளர் செல்வன் **ஸ்ரீஸ்காந்தராஜா** (ஸ்ரீ) அவர்கட்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி **சத்தியாதேவி** அவர்கட்கும் |
|---|---|

கலட்டி அம்மன் ஆலயத்தில் திருமணம் செய்ய திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

| திரு. திருமதி ஐ. சின்னராஜா விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம். | திரு. திருமதி க. இராசேந்திரம் (வைரமுத்து) 46, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். |
|---|---|

வரவேற்பாளர்கள்:
இ. யசோதரன்,
இ. ராஜேஸ்வரன், இ. கிரிதரன்.

(சி- 4288)



## கம்பியூட்டர் கல்வி


Diploma In Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்: 25 - 01 - 1991 10-30 A. M.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)
27 - 01 - 1991 10-30 A. M.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

பல்கலைக்கழக புகுமுக, பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கும், லண்டன் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கும் உகந்த வகையில் விளக்கமான முறையில் கற்பிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
சேரும்போது செலுத்தவேண்டியது 500/-மட்டுமே.
மேலதிக விபரங்களுக்கு:

UNIKCO COMPUTER CENTRE
NO. 37, CLOCK TOWER ROAD, JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாகவுள்ள மேல்மாடி)




(ஏ 1058)

## தமிழகத்தின் தலைகுனிவு!

ஆன்றவிந்த சான்றோர்க்கு உரிய இடம் பாராளுமன்றம், சட்ட சபைகள்! ஆண்டு அனுபவிக்கும் எண்ணம் கொண்ட ''பதவிபித்து அரசியல் வாதிகளின்'' கூடமாக சட்டசபை மாறிவிட்டால் அங்கு ஏச்சும் பேச்சும் கூச்சலும், குழப்பமும் ஏன் துகிலுரிசம்பவங்களுமே, நிகழ்ந்து விடுகின்றன!

தமிழகத்துச் சட்டசபை கடந்த சில ஆண்டுகளாக தரத்தில் மிகவும் தாழ்ந்து தனது தனித்துவத்தை இழந்து நிற்கின்றது!

சபையில் தொடர்ந்து சில நாட்களாகநிகழ்ந்து வந்த அமளி துமளி திரு. எஸ். திருநாவுக்கரசு தலைமையிலான மூவர் அணியை, அ. இ. அ. தி. மு. கழகம்-2 என சபாநாயகர் திரு. தமிழ்குடிமகன் அறிவித்ததை தொடர்ந்து, சபையில் குழப்பமும் கூச்சலும் மிகுந்து சபாநாயகரின் ஆடைகளே அலங்கோலமாகி அவரும் இழுபறிப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார்!

மகாபாரதத்தில் துரியோதனன் அரண்மனையில் தம்பி, துச்சாதனன் அரங்கேற்றிய திரௌபதை துகிலுரி நிகழ்வு இன்று வரை கௌரவர்களுக்கும், அரசவைக்கும் அவமானத்தை ஏற்படுத்திய இழிசெயலாக நிலைத்துவிட்டது!

தமிழகத்துச் சட்ட சபையிலும், கடந்த ஆண்டில் செல்வி ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட அவமதிப்பு நிகழ்வானது மகாபாரதத்து திரௌபதை துகிலுரி முயற்சியை நினைவூட்டி அவையின் அலங்கோல இழிசெயல்கள் இன்னும் ஓயவில்லை, சாகவில்லை என்பதையே நிலைநாட்டியுள்ளது!

நடுநிலைக்கு நீதிதேவனாகி சபை நடவடிக்கைகளை ஒழுங்குடன் நடாத்திச் செல்லவேண்டிய, அன்றைய சபாநாயகர் பி. எச். பாண்டியன் சட்ட சபையில் செய்த அட்டகாசங்களை தமிழகம் இன்றும் மறந்துவிடவில்லை!

தனது கால் சிலம்பை உடைத்து ''மன்னது நீதி பிழைத்துவிட்டது'' என்று கண்ணகி, அவையில் நிறுவியது கண்டு- ''நான் தவறு இழைத்துவிட்டேன்'' என்று கூறி பாண்டிய மன்னன் வீழ்ந்து மடிந்து 'தமிழ் நீதி' காத்த தமிழகத்தின் சட்ட சபையோ இன்று, இவ்வளவு தரம் தாழ்ந்துவிட்டதை நினைத்து தமிழர்களே தலைகுனிய வேண்டியுள்ளது.

— மயூரன்

★ சவூதி அரேபியா மீது

# ஈராக் தரைப்படை தாக்குதலை ஆரம்பித்தது!

(பாக்தாத்)

சவுதிஅரேபியா பகுதியில் ஈராக் விமானப்படையின் உதவியுடன் தரைப்படை தாக்குதலை ஆரம்பித்துள்ளது. லட்சக்கணக்கான ஈராக் தரைப்படைகள் சவுதி நோக்கி முன்னேறிச் செல்வதாக ஈராக்நாட்டு தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டது.

★ கடந்த வாரம் பிரிட்டன் முதலாவது தரைப்படையை ஈராக் நோக்கி அனுப்பியபோது, பாலைவனத்தில் முன்னேற முடியாத காரணத்தினால் அமெரிக்காவும் பிரிட்டனும் தரைப்படைத் தாக்குதலை ஒத்திவைத்தன.

★ ஈராக் தரைப்படை தாக்குதல்மூலம் சவுதிஅரேபியாவின் சில எல்லைப்பகுதிகளைக் கைப்பற்றியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளபோதிலும் அப்படியான ஒரு தகவலும் இல்லையென பன்னாட்டுப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

★ பொதுமக்கள் வாழும் பகுதிகளில் அமெரிக்கா பன்னாட்டுப்படைகள் தாக்குதல் நடத்தியதாக ஈராக் அறிவித்துள்ளது. இதனால் பொதுமக்கள் பலர் பலியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## 12,000 தடவைகள் தாக்குதல்

★ ஈராக்மீது அமெரிக்க பன்னாட்டுப் படைகள் இதுவரை 12,000 தடவை தாக்குதல் நடத்தியுள்ளனர். ஒரு நாளில் மட்டும் நேற்று முன்தினம் 2000 தடவைகள் விமானங்கள் அலையலையாகச் சென்று தாக்குதல் நடத்தின.

★ ஈராக்கின் துறைமுக நகரான பாத்ராம்மீது அமெரிக்க பன்னாட்டுப்படைகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

★ ஈராக்மீது பாரிய விமானப்படைத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றபின்னர் தரைப்படைத் தாக்குதல் ஆரம்பமாகும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஒருவாரகால விமானத்தாக்குதலில் ஈராக்கின் எல்லா அணுஆலை நிலையங்களும் தாக்கப்பட்டதாக பன்னாட்டுப்படை அதிகாரி தெரிவித்தார்.

★ சவுதி எண்ணெய் கிணறுகள்மீது ஈராக் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

## 8 விமானங்கள் வீழ்த்தப்பட்டன

★ பன்னாட்டுப்படைகள் மேலும் 8 விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

இஸ்ரேல்மீது நேற்று நான்காவது 'ஸ்கட்' ஏவுகணை ஈராக் செலுத்தியது. இந்த ஏவுகணையை அமெரிக்க ஏவுகணை ஆகாயத்தில் வழிமறித்து அழித்துவிட்டது.

★ அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மகாநாட்டை கூட்டவேண்டும் என்ற ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் யோசனையை அணிசேராநாட்டுத் தலைவர் வரவேற்றுள்ளார்.

## இஸ்ரேல் அமைச்சரவை முடிவு

★ 4-வது ஏவுகணையை ஈராக் இஸ்ரேல்மீது ஏவியதை தொடர்ந்து இஸ்ரேல் படைத்தளபதிகள் கூடி ஆராய்ந்துள்ளனர், உடனடி பதில் தாக்குதல் இல்லை என்று இஸ்ரேலிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளன,

★ ஈராக்மீது பதில் தாக்குதல் உடனடியாக இல்லையென்றும் மேலும் 2 வாரங்களுக்கு நிலைமையை ஆராய்வதென்றும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

★ இஸ்ரேலுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க உரிமை இல்லையென்று சிரியா அறிவித்துள்ளது. குவைத்தை ஈராக் கைப்பற்றியது தவறானது என்றும் சிரியா தெரிவித்துள்ளது.

★ வளைகுடா விடயத்தில் அரபு நாடுகள் கூட்டாக முடிவெடுக்க வேண்டுமென்றும் ஈராக் தன்னிச்சையாக முடிவு எடுக்கக் கூடாதென்றும் மேலும் தெரிவித்துள்ளது.

★ வளைகுடா யுத்தம் மோசமடையுமானால் வளைகுடாவிலுள்ள இலங்கையர்களை சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் திருப்பி அழைப்பதென இலங்கை பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார். இவர்களுக்கு யப்பான், மலேசியாவில் வேலைதேடித்தர முயற்சிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

★ ஈராக்கிலுள்ள இலங்கைத் தூதரக ஊழியர்கள் பாதுகாப்பாக இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

## 375 இந்தியர்கள்

★ ஈராக்கில் உள்ள 375 இந்தியர் எல்லையைக் கடந்து ஜோர்தான் வந்துள்ளனர். இவர்களை செங்கடல் துறைமுகமூடாக அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# அரிசி, பால்மா, சவர்க்காரம் பிஸ்கற் விலைகள் நிர்ணயம்!

(யாழ்ப்பாணம்)

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு அவசியமான பொருட்கள் சிலவற்றை யாழ். வர்த்தகர்கள் தெரிவு செய்து அவற்றிற்கான உயர் விற்பனை விலைகளையும் நேற்று மாலை முடிவுசெய்தார்கள்.

முன்னர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அதே நிபந்தனைகள் இப்பண்டங்களின் விற்பனைக்கும் பொருத்தமாக இருக்கவேண்டுமென வர்த்தகர் சங்கம் முடிவு எடுத்துள்ளது.

பெரும்பாலும் இப்பண்டங்களின் விலைகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறு இன்றி இருப்பதைக் கவனத்தில் கொண்டே விலைகள் நிர்ணயிக்கப்பட்டதாகக் கருத்து வெளியிட்டார்கள்.

மேலும் ஒரு தொகுதிப் பண்டங்களுக்கான விலை நிர்ணயம் விரைவில் வெளியிடப்படும் எனவும் வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதற்கமைய யாழ். மாவட்ட வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள மேலும் சில பொருட்களின் விலைப் பட்டியல் கீழ்வருமாறு:- (வி)

| பொருட்கள் | குறித்தவிலை | ஏற்றுக்கூலி | முடிவுவிலை | மொத்தவிலை | சில்லறைவிலை |
|---|---|---|---|---|---|
| வெள்ளைப்பச்சை அரிசி | 14.50 | 10.00 | 24.50 | 27.00 | 29.00 |
| கோறு வெள்ளை அரிசி | 15.00 | 10.00 | 25.00 | 27.00 | 29.50 |
| சம்பா அரிசி | — | — | — | 30.00 | 31.00 |
| லக்ஸ் | 05.50 | 01.50 | 07.00 | 08.00 | 09.00 |
| லைவ்போய் | 05.25 | 01.50 | 06.75 | 07.75 | 08.75 |
| றெக்ஸ்சோனா | 04.80 | 01.50 | 06.30 | 07.30 | 08.30 |
| வொண்டலைற் [சி] | 04.45 | 01.50 | 05.95 | 06.95 | 07.95 |
| லக்ரோஜின் [புல்கிறீம்] | 59.50 | 07.50 | 67.00 | 68.00 | 70.00 |
| நெஸ்ரோமோல்ட் [ரின்] | 73.00 | 07.50 | 80.50 | 81.50 | 83.50 |
| செர்லக் | 63.00 | 07.50 | 70.50 | 71.50 | 73.50 |
| அங்கர் | 46.00 | 07.50 | 53.50 | 54.50 | 56.50 |
| கிறீம் கிறுக்கர் | 19.50 | 05.00 | 24.50 | 25.50 | 27.50 |

## தமிழ்நாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர் தெரிவித்தார்.

அண்ணா தி. மு. க. உறுப்பினர்களை தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற கூட்டத் தொடரிலும் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலும் கலந்துகொள்ளக் கூடாதென சபாநாயகர் தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பதில் நடவடிக்கையாகவே அண்ணா தி. மு. க. மேலிடம் இம்முடிவை எடுத்துள்ளது.

## இனப்பிரச்சனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவியுமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நேற்று பௌத்த விகாரையொன்றில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் இலங்கையின் வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் சம்பவங்களையிட்டு எவரும் திருப்தியடையமுடியாது என்றும் இப்பிரச்னையை முடிவுக்கு கொண்டுவருவதில் சகலரும் பாடுபடவேண்டும் என்றும் கூறினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். ஜா, பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். [க]

## உணவுப் பொருட்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச்சென்றனர்.

கூட்டத்தில் பொதுமக்களால் கையளிக்கப்பட்ட மகஜரை பெற்றுக்கொண்டு யாழ் அரசாங்கஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பேசுகையில்:

"யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் விமானத் தாக்குதல்கள் பற்றியும், உணவுப் பற்றுக்குறையால் மக்கள்படும் கஷ்டங்களையும் நான் உடனடியாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அறிவிப்பேன்" என்றார்.

இக்கூட்டத்தில் பலாலி ஆசிரிய கலாசாலையின் சார்பில் திரு. பரமானந்தம், யாழ். பல்கலைக்கழக சார்பில் திரு. மரியநாயகம் கடற்றொழிலாளர் சார்பில் திரு. வேல்மாறன் கூட்டுறவாளர் சங்க சார்பில் திரு. கனகலிங்கம், தனியார் கல்வி நிறுவனங்கள் சார்பில் ஆசிரியர் மோகன் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. மகாசிவம் உட்பட பலர் பேசினார்கள். (ஸ்)

## மேஜர் மக்கன்ரே

(1ம பக்கத் தொடர்ச்சி)

தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவம், இழப்புகளுடன் பின்வாங்கியது.

இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேஜர் மக்கன்ரோ (சதாசிவம் புலேந்திரன் வவுனியா -கனகராயன்குளம்) வீரமரணம் அடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். (வி)

## இந்தியாவுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் கருத்துக்களை அரச கவனத்திற்கு எடுக்கும் என மேலும் அவர் தெரிவித்தார். (மா)

## இந்திரா காங்கிரஸ

(1ம் பக்க தொடர்ச்சி)

தி. மு. க, உறுப்பினர்கள்மீது விதித்திருந்த தடை உத்தரவினை விலக்கிக் கொள்ளும் வரை சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் பகிஷ்கரிக்கப் போவதாக காங்கிரஸ் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

காங்கிரஸ் உறுப்பினர்களின் கோரிக்கையை உப சபாநாயகர் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து அவர்கள் வெளிநடப்புச் செய்தனர். அவர்களது பகிஷ்கரிப்பு மேலும் தொடருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

வில்லியம் ஹர்வே
ஞாபகார்த்த மருத்துவமனை

பொது மக்களின் நலன்கருதி மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது வில்லியம் ஹர்வே ஞாபகார்த்த மருத்துவமனை. வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும் ஆய்வுகூட மருத்துவப்பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ம் திகதி முதல் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

WILLIAM HARVEY
MEMORIAL HOSPITAL
17, KANDY ROAD, CHUNDIKULI,
JAFFNA. (சி-1061)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.